International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 2 April - June 2026

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# திருவாசகம் கூறும் இறைச் சிந்தனைகள்

**பொ. சாந்தி**
பகுதிநேர முனைவர் பட்டஆய்வாளர்
அரசு ஆடவர் கலைக் கல்லூரி
கிருட்டிணகிரி - 635001

## முன்னுரை

திருவாசகம் என்பது பன்னிரு திருமுறைகளில் எட்டாம் திருமுறையாக இடம்பெற்றுள்ளது. மாணிக்கவாசகர் இயற்றிய பக்திப்பனுவல். சைவசித்தாந்த சாத்திரங்கள் குறிப்பிடும் முப்பொருட்களில் முதலாவதாகக் குறிக்கப்ப:டுவது ‘பதி’. பதியென்பது இறைவனைக் குறிப்பதாகும். இறைவன் எங்கும் நிறைந்தவனாகவும், ஒருவனாய் உலகினை ஆள்பவனாகவும், உலகம் முழுவதும் அதற்கு அப்பாலும் நிறைந்தவனாகவும் இருப்பவன். அத்தகைய இறைவன் சைவசமயத்தில் சிவன் என்னும் பெயரால் அழைக்கப்படுகிறார். மாணிக்கவாசகர் இயற்றிய திருவாசகத்தில் இறைச்சிந்தனை எவ்வாறு அமைந்துள்ளது என்பது குறித்து இ;க்கட்டுரையில் காண்போம்.

## பதியின் இயல்பு

உயிர்களின் நெஞ்சக்கமலத்தே கேழில் பரஞ்சோதியாய்க் கிளர்ந்து தோன்றும் சிவபரம்பொருளைத் தம் மனத்தகத்தே கண்டு வழிபட்டு மகிழ்ந்த தவப்பெருஞ் செல்வர்கள் தாம் கண்ட அத்தெய்வகாட்சியை உலகமக்கள் எல்லோரும் புறத்தே கண்டு வழிபட்டு உய்திபெறுதல் வேண்டும். என்னும் உயர்ந்த குறிக்கோளுடன் புறத்தே அமைத்துக் கொண்ட திருஉருவமே சிவலிங்கத் திருமேனியாகும். சிவலிங்கத்தின் அடிப்பீடம் உயிர்களின் நெஞ்சத்தாமரையின் உருவாகவும் அதன் நடுவே சுடருருவில் நிமிர்ந்து தோன்றும் வண்;ணம், காண்டற்கரிய கடவுள் தீவண்ணனாகச் சுடர்விட்டொளிரும் நிலையைப் புலப்படுத்தும் அருவமாகவும் திகழ்தலால் சிவலிங்கம் இறைவனுக்குரிய அருவுருவத் திருமேனியாயிற்று என்னும் கருத்து கீழ்க்காணும் திருவாசகப் பாடல்வழி அறியலாம்.

சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனே சொல்லுதற் கரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்குமா னந்தமா கடலே
தீதிலா நன்மைத் திருவருட் குன்றே
திருப்பெருந் துறையுறை சிவனே

**யாதுநீ போவதோர் வகையெனக் கருளாய்**

**வந்துநின் இணையடி தந்தே.**[1]

ஒளிப்பிழம்பாகத் தோன்றும் திருவுடையவனே, அப்பிழம்பாகக் கூறப்படும் ஒப்பிலா அருவத் திருமேனியுடைய முழுமுதல்வனே, சொல்லொண்ணாத, முதல், நடு, இறுதியாக நின்றிலங்கும் விழுப்பொருளே, ஆருயிர்களின் கட்டறுத்துத் திருவடிப்பேறாம் ஒட்டறுத்தும் பேரின்பப் பெருங்கடலே, எத்தகைய தீமையும், இல்லாது எல்லாவகையான நன்மையும் நிறைந்த திருவருண்மலையே, திருப் பெருந்துறை வாழ் சிவபெருமானே, நீ சிவகுரவனாய் எழுந்தருளி வந்து திருவடியிணையினைத் தந்தருளினை; அங்ஙனம் தந்தருளிய நீ எளியேனைக் கை விட்டுப்போம் முறையினைக் கூறியருள்வாயாக என்று இறைவனின் திருமேனி அமைப்பினை இப்பாடல் எடுத்தியம்புகிறது. மேலும்,

பதியின் இயல்பு, புர்சத்திற்கு உட்பட்டுத் துன்புறுகின்ற பசுக்களை விடுவிப்பதாகும். அச்செயலைச் செய்கின்ற காலத்து இறைவன் பல உருவங்களைத் தாங்கி அருள் புரிகின்றான். இதனை,

**“மருவிய அளவை காட்சி மானமென் றிரண்டி வற்றால்**

**கருதிய பொருள்கள் ஞான ஞேயமாய்க் கணத்திற் பங்கம்**

**வருமுரு அருவம் வீடு வழக்கென நான்க தாகித்**

**தருமவை ஒன்றி ரண்டாய்த் தான்விரிந் தெட்டினாமே ”.**[2]

எனச் சிவஞானசித்தியார் கூறுகிறது. இவ்வாறு இறைவன் எடுத்த வடிவம் சத்தியின் சரீரமாகும். அதனால் அது அருட்திருமேனி என வழங்கப்படும். ஈசன் மனம், வாக்கிற்கு எட்டாதவன். அவன் கொள்ளுகின்ற உருவங்கள் உயிர்கள் தம்மைக் கண்டு உய்தற் பொருட்டேயாகும்.

**இறைவனின் வடிவமைப்பும் பயனும்**

இறைவன் உயிர்களுக்காக எடுக்கின்ற திருமேனிகள் அருவம், அருவுருவம், உருவம் என மூன்று வகையினவாகும். அருவம் - சத்திரூபம், அருவுருவம் - ஒளி வடிவம், உருவம் - இலிங்கத் திருமேனி. இவ்வாறு இறைவன் கொள்ளும் திருமேனிகள் தம் பொருட்டன்று உயிர்களுக்காகவேயாகும். ஈசன் உருவத்திருமேனிகள் கொண்டாலும் அவன் உருவம் உலகினைக் கடந்ததாகும். பெருமான் எடுத்த வடிவங்கள் பலவாக இருந்தாலும், இருபத்துநான்கு மட்டுமே உருவத்திருமேனிகள் என்று தொகைப் படுத்தப்படுகின்றன. பிரம்மனை வணங்கிடப் படைப்பாற்றல், திருமாலை வழிபட்டால் காத்தல், உருத்திரனைத் தொழுதால் அழித்தல் தொழில் செய்தற்கான திறனைப் பெறலாம். உமா மகேசுவரரைப் பூசித்தால் திருமண விருப்பம் உண்டாகும். கல்யாண சுந்தரர் திருவடியை வணங்கினால் கல்யாணம் கைக்கூடும். உமையொரு பாகரை வழிபட்டால் மனைவியிடத்துச் சிறந்தபோகம் பெறலாம். சோமேஸ்கந்தர் வடிவில் வழிபட்டால் நற்புத்திரப்பேறும், சந்தான விருத்தியும் அடைவர். சக்கரதான மூர்த்தியைப் பூசித்தால் உலகம் வியக்கும் வண்ணம் இன்ப ஆக்கத்தைப் பெறுவர். தட்சிணாமூர்த்தியின் திருவடியை வணங்கினால் சிவனிடத்து அன்பும், உலகத்தின்பால் வெறுப்பும் உண்டாகும். பிச்சாடனாரைப் போற்றினால் மகளிரிடத்துக் கொள்ளும் மோகத்தில் விருப்பமின்மையை ஏற்படுத்தும். இக்கருத்தை,

**வம்பார் தெய்வ வடவாலின்**

**வதிந்தார் கமலத் தாளி றைஞ்சில்**

**தம்பால் விருப்புந் துயர் இலங்கும்**

**சகத்தில் வெறுப்புந் தழைப்பிப்பார்**

**பம்பா தரவில் கடிஞைகொளும்**

**பயிக்க வேடத் தரைப்பரசில்**

**கொம்பே ரிடையார் கரநெரிப்பக்**

**கொள்ளும் போகம் வெறுப்பிப்பார்.**[3]

எனவரும் பாடலால் கச்சியப்பர் வெளிபடுத்துகிறார்.

கங்காளரை வழிபட்டால் வைராக்கிய குணம் உருவாகும். காமதகனமூர்த்தியை வழிபட்டால் மெய்ஞ்ஞானத்தை அருள்வார். காலசங்கரா மூர்த்தி பக்குவம் உடையவர்களுக்கு வரும் துன்பத்தை நீக்கியருள்வார் சலந்தாரியை

வழிபட்டால் அச்சமின்றி யோகம் செய்வாரின் கோபக் கனலை அழிப்பார். திரிபுராரியின் திருவடியைத் தொழுதால் மாறுபட்ட ஆன்மாக்களை வசபடுத்தி முக்குணங்களை யும் மாற்றுவார். சரபமூர்த்தியின் வடிவத்தை வழிபடுவதால் வலிய கன்மங்கள், மாயா மலங்கள் நீங்கும். நீலகண்டர் ஆணவ மலத்தை நீக்குவார். திரிபாத மூர்த்தியைப் பூசித்தால் பிறப்பில் வெறுப்பும், சரியை, கிரியை, யோகம் ஆகிய நெறிகளில் முயற்சியினையும் உண்டாக்குவார். ஏகபாத மூர்த்தியைத் தொழுதால் மனம் ஞான நிட்டையை விரும்பும். பைரவரை வழிபட்டால் வாழ்நாள் முழுவதும் ஆசையை வெறுத்து வாழலாம். இடபாரூடரைத் தொழுதால் அவர் பக்குவத்தை உண்டாக்கி வீடுபேற்றையும் அருள்வார். சுந்திரசேகரரை வழிபடின் பிறப்பு இறப்புகளில் அச்சம் உண்டாகும். ஆனந்த நடராசருக்கு அடிமையாயின் பொறியடக்கம் பெற்றோர்க்கு ஆனந்த வெள்ளம் பெருகச் செய்வார். கங்காதர மூர்த்தியை வழிபட்டால் நீங்காத ஆனந்தம் ஏற்படும் என முறைப் படுத்திக் கூறியுள்ளார். இவ்வுருவத் திருமேனி கள் இறைவன் தம் திருவிளையாடலை நிகழ்த்துவதற்காகவும், கொடியவர்களை அழித்து அடியார்களுக்கு அருள்புரிவதற்காக வும் மேற்கொள்ளப்பட்டவையாகும் எனக் கச்சியப்பர் எடுத்துரைக்கிறார்.

## அட்டமூர்த்தி

எல்லாம் வல்ல சிவபெருமான் நிலம், நீர், நெருப்பு, வளி, விசும்பு, ஞாயிறு, திங்கள், ஆன்மா என்னும் எண்பொருளையும் தனக்குரிய திருமேனியாகக் கொண்டு திகழ்தலின் அம்முதல்வனுக்கு அட்டமூர்த்தி யென்னும் பெயர் வழங்குவதாயிற்று. இதனையே, திருவாசகம் கிழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறது.

**“நிலம் நீர் நெருப்புயிர் நீள் விசும்பு**
**நிலாப்பகலோன்**
**புலனாய அமைந்தனோ டெண்வகையாயப்**
**புணர்ந்து நின்றான்**
**உலகே ழெனத்திசை பத்தெனத்தான்**
**ஒருவனுமே**
**பலவாகி நின்றவா தோணோக்கம்**
**ஆடாமோ”[4].**

எனும் பாடல் எங்கும் நீக்கமற நிறைந்திருக் கும் சிவபெருமான் ஆருயிர்கள் எளிதாக வழிபட்டுய்யும் பொருட்டுக் காணும் எண்பெரும் வடிவினைக் கொண்டு பயனருளுகின்றனன். அவ்வடிவங்கள் முறையே புடைபெயர்ச்சி தோன்றாது நிலைப்புப்போற் காணப்படும் நிலமும், அந் நிலத்தினை நிலைக்கலனாகக் கொண்டு புடைப்பெயர்ச்சி தோன்றக் கீழ் நோக்கிச் செல்லும் நெருப்பும், இம் மூன்றும் போல் வடிவாகக் கட்புலனாகாது செயலால் புலனாகும் உயிர்ப்பாகிய காற்றும், இவை நான்கிற்கும் இடங்கொடுத்து எங்கணும் பரந்து நிற்கும் உயர்ந்த விசும்பும், ஞாயிற்றின் ஒளியினை ஏற்று இரவின்கண் தண்ணொளிதரும் நிலவோனும், பல்கதிர் பரப்பிப் பகற்கண் வெய்ய வொளி தரும் பகலோனும், அறிவுள்ளதாய் ஆளெனப்படும் மைந்தனாகிய ஆருயிரும் எனப்படும். இவ்வெண்வகையாகவும் புணர்ந்து நின்றருளினை புண்ணியப் பொருளாம் சிவன், இவையுமன்றி எழுவகையாகச் சொல்லப்படும் உலகங்களும், பத்துத் திசைகளும் பரிவுறக் கலந்து நின்ற பண்பன் சிவன். அவன் ஒப்பில் ஒருவனானவன். தான் ஒருவனாகவே நின்று பலவாகி நின்றருள்கின் றனன். அந்நிலையினைப் பாடித் தோனோக்கம் ஆடுவோமாக என்று மாணிக்க வாசகர் இறைவன் அட்டமூர்த்தியாக நின்று எழுந்தருளும் பாங்கினை எடுத்துரைக்கிறார்.

மேலும், இங்ஙனம் எண்பேருருவாய் இயைந்து நிற்கும் இயற்கை உண்மையறி வின்ப வடிவினன் சிவன். இவ்வுண்மையி னைத் திருவடியுணர்வாற் கண்டு தெளிந்த பெருமக்கள் நம் தொன்மைச் செந்தமிழ்ச் சான்றோராவர். அவர்களே உலகமெங்கணும் இவ்வுண்மையினைப் பரப்பியருளிய ஒண்மை யராவர். இவ்வுண்மையினை ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னெழுந்த தொகை நூல்களில் காணலாம். அதனைய டுத்ததாகிய மணிமேகலையின்கண் காணப் படுவது பின்வருமாறு,

**…………….”இறைவன் ஈசனென**
**நின்ற சைவ வாதிநேர் படுதலும்**
**பரசுநின் தெய்வம் எப்படித் தென்ன**

**இருசுட ரோடிய மானனைம் பூதமென்**
**றெட்டு வகையும் உயிரும்யாக் கையுமாய்க்**
**சுட்டிநிற் போனும் கலையுருவி னோனும்**
**புடைத்துவிளை யாடும் பண்பி னோனும்**
**துடைத்துத் துயர்தீர் தோற்றத் தோனும்**
**துன்னில் வேறு தானொன் றிலோனும்**
**அன்னோ னிறைவ னாகுமென்**
**றுரைத்தனன்.”**[5]

எனும் பாடல் சிவன் அட்டமூர்த்தியாக எழுந்தருளி அருள்செய்யும் பாங்கு மணிகேலையில் சமயக்கணக்கர் திறம்கேட்ட காதையில் எடுத்ததாளப்பட்டுள்ளது.

மேலும், சிவபெருமானுக்குரிய எண்பேருரு வங்களில் எல்லாருங்காண முதன்மைப் பெற்று விளங்கவிரொளியுடையதாய்த் திகழ்வது ஞாயிறொன்றே யாதலின் கதிரவன் வழிபாடு கற்றோர் கல்லாதார் ஆகிய எல்லா மக்களாலும் சிறப்பாக மேற்கொள்ளப் பெறுவதாயிற்று. இது குறித்தே பகலவன் வணக்கத்தின் மேலதான காயத்திரி மந்திரமாகிய இதனையே வேதியர் பலரும் காலை நண்பகல் மாலை என்னும் மூன்று பொழுதுகளிலும் ஓதிச் சிறப்பாக வழிபாடு செய்யக் காண்கிறோம். காயத்திரி மந்திரத்தில் பார்க்கன் என்ற பெயராற் போற்றப் பெறுவோன் எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானே யென்பது மைத்திராயணீயோப நிடதத்திலும் வடமொழி அமரநிகண்டிலும் தெளிவுறுத்தப் பெற்றுள்ளது. இந்நுட்பம்,

**“அருக்கன் பாதம் வணங்குவ ரந்தியில்**
**அருக்க னாவா னரனுரு வல்லனோ**
**இருக்கு நான்மறை யீசனை யேதொழும்**
**கருத்தி னைநினை யார்கன் மனவரே”.**[6]

எனத் திருநாவுக்கரசர் அருளிய திருப் பாடலால் இனிது புலனாகிறது.

**முடிவுரை**

சைவசமயம் முடிந்த முடிபான கொள்கையைக் கொண்டது.. இதனைச் சைவசித்தாந்தம் என்பர். இது கூறும் உண்மைப்பொருள்கள் பதி, பசு, பாசம் என்னும் மூன்றாகும். இவற்றில் ஒன்றான பதியின் இயல்பு, அவனை வழிபடுவதால் ஏற்படும் பயன்கள் குறித்தும், இறைவனின் அருவுருவ திருமேனியமைப்பு, அருள்செய்யும் திறன் பற்றியும், மேலும் திருவாசகத்தில் இறைச்சிந்தனை எவ்வாறு அமைந்துள்ளது.

**சான்றெண் விளக்கம்:**

1. பா.இராமநாதப்பிள்ளை, - திருவாசகம் விளக்கவுரை, கோயில் திருப்பதிகம் பா.8
2. சிவஸ்ரீ சபாரத்தினம் சிவாசாரியார் - சிவஞான சித்தியார் ஆகமப் பேருரை சூத்திரம் - 65
3. திருவாவடுதுறை ஆதினம் - பேரூர்ப் புராணம், காலவன் வழிபடுபடலம் பா.16
4. பா.இராமநாதப்பிள்ளை, - திருவாசகம் விளக்கவுரை, திருத்தோணோக்கம் பா.4
5. ந.மு.வேங்கடசாமி நாட்டார், ஔவை சு. துரைசாமிப்பிள்ளை – மணிமேகலை மூலமும் உரையும், 27 சமயக்கணக்கர்,- வரி.90-5
6. ச.வே.சுப்பிரமணியன் – பன்னிரு திருமுறைகள், ஐந்தாம் திருமுறை, பா.8

**துணைநூற் பட்டியல்**

1. பா.இராமநாதப்பிள்ளை, திருவாசகம் தெளிவுரை, கழகவெளியீடு, திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
2. ஸ்ரீ சபாரத்தினம் சிவாசாரியார், சிவஞானசித்தியார் ஆகமப் பேருரை, தமிழ்ப் பேரவை, சிட்னி, ஆஸ்திரேலியா.
3. திருவாவடுதுறை ஆதினம், பேரூர்ப் புராணம், காலவன்வழிபடுபடலம், ஸ்ரீ ரஞ்சனி அச்சகம், சென்னை.
4. பா.இராமநாதப்பிள்ளை, திருவாசகம் தெளிவுரை, கழகவெளியீடு, திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
5. ந.மு.வேங்கடசாமி நாட்டார், ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, மணிமேகலை மூலமும் உரையும், கௌரா பதிப்பகம், சென்னை.
6. ச.வே.சுப்பிரமணியன், பன்னிரு திருமுறைகள், ஐந்தாம் திருமுறை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.